[1987 மார்ச் 6]

தமிழ்நாட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரி

90—(*வினா எண். 12168)—திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூன்று சுய நிதி மருத்துவக் கல்லூரிகளும், மத்திய மருத்துவக் குழுவின் அனுமதியோ அல்லது மத்திய அரசின் அனுமதியோ பெறாமல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என மத்திய சுகாதார அமைச்சர் நாடாளுமன்ற மேலவையில் எழுத்து மூலம் தெரிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 91 முதல் 94 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் சாதியின் பெயரில் சங்கங்கள்

95—(*வினா எண். 2283)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாதியின் பெயரால் உள்ள சங்கங்களை தடை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) இதுகுறித்து மத்திய அரசிற்கு தமிழக அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. என். வியஜபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள அனைத்துச் சாதிகளும் சங்கங்கள் வைத்திருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும்